**கஹவத்த பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 பெப்ரவரி 27 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 சனவரி 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூன் 22 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தின் காரணமாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கஹவத்த பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) வியாபாரச் சந்தைத் தொகுதி நிர்மாணிக்கப்படுவதற்காக 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 13,800,000 தொகையான கடன் தொகை, மீளச் செலுத்தப்பட வேண்டிய கடன் தொகையாக கணக்கீடு செய்யப்படுவதற்குப் பதிலாக மூலதன வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் திரண்ட நிதிக் கணக்கு மீதி அத் தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் உறுதிப்படுத்தலின் படி, வியாபாரச் சந்தைத் தொகுதி நிர்மாணிக்கப்படுவதற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகைக்கு உரித்தாக மீளாய்வாண்டிற்கான வட்டித் தொகை ரூபா 790,800 ஆன போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 986,750 செலவில் செலவினத் தலைப்பிற்குச் சீராக்கப்பட்டிருந்தது. இதன் படி, மீளாய்வாண்டின் செலவினத் தொகையான ரூபா 195,950 தொகை கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) பிரதேச சபை வியாபாரச் சந்தைத் தொகுதி நிர்மாணிக்கப்படுவதற்காக தனியார் நிறுவகம் ஒன்றுடன் 2013 ஆம் ஆண்டின் போது ஏற்படுத்தப்பட்டிருந்த உடன்படிக்கையின் படி, மீளாய்வாண்டின் இறுதியில் மேலும் செலுத்தப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 5,840,784 ஆகக் காணப்பட்டது. செலுத்தப்பட வேண்டிய பகுதி காசாக கடன் கொடுத்தோருக்காக ரூபா 6,829,830 தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் மேலும், ரூபா 11,000,000 தொகை எவ்வித நிச்சயிக்கப்பட்ட அடிப்படை அல்லது உடன்படிக்கை மேற்கொள்ளப்படாது கடன்கொடுத்தோருக்காக ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஈ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 220,450 பெறுமதியான நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 13,045,000 பெறுமதியான சொத்துக்கள் அன்பளிப்பு ஒதுக்கமாக கணக்கீடு செய்யப்படுவதற்குப் பதிலாக மூலதனச் செலவினத்திற்கு வருமானப் பங்களிப்புக் கணக்கிற்கு கணக்கீடு செய்ப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டிற்கு உரித்தான கணக்காய்வுக் கட்டணமான ரூபா 58,501 கடன்கொடுத்தோருக்காக ஒதுக்கப்பட்டு ஆண்டின் செலவினத்திற்குச் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நீதிமன்றத் தண்டப்பண நிலுவை வருமானம் ரூபா 5,310,416 தொகையான போதிலும் நீதிமன்றத் தண்டப்பணப் பேரேட்டுக் கணக்கின் படி அம் மீதி ரூபா 4,367,932 தொகையானமையால் ரூபா 942,484 தொகையான வேறுபாடு காணப்பட்டது. மீளாய்வாண்டின் சனவரி முதல் செப்தெம்பர் வரை நீதிமன்றத் தண்டப்பண வருமானமாக ரூபா

2,076,625தொகை இனங்காணப்பட்டிருக்கையில் வருடத்தின் வருமானமாக பாதீட்டு மதிப்பீட்டு வருமானமான ரூபா 4,000,000 கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் முத்திரைக் கட்டண நிலுவை வருமானம் ரூபா 2,706,940 தொகையாக இனங்காணப்பட்டிருந்த போதிலும் பேரேட்டுக் கணக்கின் படி ஆரம்ப மீதி ரூபா 1,637,080 தொகையானமையால் முறைப்படி நிலுவை வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வுச் சபையால் பரிந்துரைக்கப்பட்ட ரூபா 18,834 தொகையான பொருட்களை அகற்றுவதற்கோ அல்லது பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கை அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர் கணக்கின் மூலம் அகற்றப்பட்டிருந்தது.

(ஒ) எதிர்வரும் ஆண்டுகளுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட வீத வரித் தொகையான ரூபா 160,510 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | |
| 132(ஒ) ஆம் பிரிவு | பொது மக்களின் அங்கீகாரம் அல்லது பொதுவான முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கைகள் அல்லது ஓர் சம்பவம் அல்லது சந்தர்ப்பம் தொடர்பாக அல்லது |

| | |
|---|---|
| | செலவினத்திற்காக ஒரு வருடத்திற்கு மொத்தக் கூட்டுத்தொகை ரூபா 1,000 இற்கு மேலான செலவினங்களுக்காக அமைச்சரின் ஆவணத்தின் மூலம் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணாக 04 சந்தர்ப்பங்களின் போது ரூபா 40,300 கூட்டுத்தொகையான ஓர் செலவினம் ஏற்கப்பட்டிருந்தது. |
| 132 (ஓ) ஆம் பிரிவு | புண்ணிய அல்லது நலன்புரி நிறுவகங்களுக்கு மானிய அடிப்படையில் ஒரு வருடத்திற்கு மொத்தம் ரூபா 1,000 கூட்டுத்தொகைக்கு மேலதிகமான செலவினங்களுக்காக ஓர் ஆவணத்தின் மூலம் அமைச்சரின் முன்னங்கீகாரத்துடன் செலவினத்தை ஏற்க வேண்டிய போதிலும், இது தொடர்பாக கருத்திற்கொள்ளாது அமைச்சரின் அங்கீகாரம் இன்றி ஆண்டின் போது சமய ஸ்தலங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 04 சந்தர்ப்பங்களுக்கு உரித்தாக ரூபா 140,000 தொகையான செலவினம் சபை நிதியத்திலிருந்து ஏற்கப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம்<br>---------------------------------------------- | |
| (I) நிதிப்பிரமாண இலக்கம் 101 மற்றும் 110 வரை | 2013 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி, பற்றாக்குறையாகக் காண்பிக்கப்பட்டிருந்த தலைமை அலுவலகத்தின் 46-4075 ஆம் இலக்க உழவு இயந்திரம் டிரேலர் மற்றும் விபத்திற்கு உட்பட்டிருந்த டபிள் கப் வாகனம் தொடர்பாக கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2015 பெப்ரவரி மாதம் வரையிலும் தொடர்புபட்ட பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| II | நிதிப் பிரமாணம் இல. 371 | 2006 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை 14 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 119,149 கூட்டுத்தொகையான முற்பணம் 2015 பெப்ரவரி மாதம் வரையிலும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| III | நிதிப் பிரமாணம் இல. 571 | 1981 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படும் ரூபா 1,252,003 தொகையான வைப்பு மீதி தலைப்பு 136 தொடர்பாக தொடர்புபடுத்தப்பட்ட பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நகர அபிவிருத்தி மற்றும் புண்ணிய பூமி அமைச்சுச் செயலாளரின் 2009 ஏப்ரல் 17 ஆம் திகதிய 1597/8 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் V ஆம் பட்டோலை | சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள தொலைபேசிக் கம்பங்கள் தொடர்பாக முறையான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு குறித்த கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும் 2015 பெப்ரவரி மாதம் வரையிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,005,086 ஆக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,199,287 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி செயற்பாடுகளின் மிகை ரூபா 194,201 இனால் குறைந்திருந்ததுடன் அது 6 சதவீத குறைவாக இருந்தமை

அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவினங்களின் அதிகரிப்பும், இதற்குப் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கு உரித்தாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வீதவரியும் வரியும் | 2,523 | 2,690 | 2,712 |
| வாடகை | 4,310 | 3,099 | 692 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,026 | 756 | - |
| ஏனைய வருமானம் | 9,657 | 9,772 | 4,888 |

### 2.3.2 வீத வரி

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை வீத வரியின் பெறுமதி ரூபா 2,408,386 தொகையானதுடன் இதில் 93 சதவீதம் ஒரு வருடத்தைப் பார்க்கிலும் கூடிய காலமாக நிலுவையான மீதியைக் கொண்டிருந்தன.

### 2.3.3 வாடகை

உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் 2009 மார்ச் 09 ஆம் திகதிய இல. ப.பா.கொ. 2009/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் இறைச்சி மற்றும் மீன் சந்தை வருடாந்தம் வாடகைக்கு வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட

வேண்டியதுடன் முன்னைய ஆண்டின் போது கடை வாடகைக்கு வழங்கப்பட்ட தொகை அடுத்த ஆண்டில் ஆகக் குறைந்த கூறு விலையாகக் கருதப்பட்டு வாடகை வழங்கப்படுவதற்காக கேள்வியிடப்பட வேண்டும். கஹவத்த பொது சந்தை மாட்டு இறைச்சிக் கடைக்காக 2009 ஆம் 2010 ஆம் ஆண்டுகளுக்காக கேள்வித் தொகை முறையே ரூபா 903,000 தொகையாகவும் ரூபா 905,000 தொகையாகவும் இருந்த உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் 2011 பெப்ரவரி 09 ஆம் திகதிய இல. சிஎல்ஜீ 611 ஆம் இலக்கக் கடிதத்தின் மூலம் ரூபா 500,000 இற்கு அக் கோருனருக்கே வழங்கப்படுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. இதன் படி, 2012 ஆம் ஆண்டு முதல் 2014 வரை முறையே ரூபா 513,000 தொகையும், ரூபா 515,000 தொகையும், ரூபா 519,000 தொகைமாகக் குறைந்த பெறுமதியில் ஒரே நபருக்கு கேள்வி வழங்கப்பட்டிருந்தது. ஆகையால் கேள்வி முறையான போட்டிக்கு உட்படுத்தப்படாது சபைக்குக் கிடைக்கப்பெற்றிருக்கக் கூடிய ஆகக் கூடுதலான இலாபத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமை கண்டறியப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 ஏனைய வருமானம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் விளம்பரப் பலகைகள் மற்றும் முச்சக்கர வண்டித் தரிப்பிடங்களின் மூலம் வருமானம் உழைக்கப்படுவதற்காக துணைக் கூட்டமைப்பு விதிக்கப்பட்டு இதன் படி, வாடகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 சனவரி முதல் செப்தெம்பர் வரை பெறவேண்டிய ரூபா 1,827,875 தொகையான தண்டப்பணம் அறவிடப்பட்டிராததுடன் 2014 ஒப்டோபர் முதல் 2014 திசெம்பர் வரை பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பணத்தின் அளவு இனங்காணப்பட்டு நிர்ணயிக்கப்படுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டணமாக எவ்வித தொகையும் கிடைக்கப்பெற்றிராததுடன் இது தொடர்பாக விசாரிக்கையில் சபைக்கு

அறவிடப்பட வேண்டிய தொகையைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.6 கைத்தொழில் வரி மற்றும் வியாபார வரி**

-----------------------------------------------------------

சபை அதிகாரப் பிரதேசத்தில் வியாபார வரி மற்றும் கைத்தொழில் வரி தொடர்பாக போதிய மெய்மையாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிராததுடன் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த நிறுவகம் தொடர்பாக குறித்த படிவங்கள் பயன்படுத்தப்பட்டு முறையான தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

-------------------------------

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

-----------------------------------------------------------

**3.1.1 வெளிநாட்டுப் பயணச் செலவினம்**

-------------------------------------------------------

2014 நவம்பர் 10 ஆம் திகதி முதல் 2014 நவம்பர் 15 ஆம் திகதி வரை பிரதேச சபை உறுப்பினர்கள் 04 பேர் பங்கேற்றிருந்த தனியார் நிறுவகத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட 05 நாள் வெளிநாட்டுப் பயணத்திற்காக உறுப்பினர் ஒருவருக்கு ரூபா 98,200 படி, ரூபா 392,800 தொகை தனியார் நிறுவகத்திற்கு சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

I. வெளிநாட்டிற்குச் செல்வதற்கு முன்னர் குறித்த லீவு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

II. பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

III. பயிற்சியின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவை உள்நாட்டு ரீதியாகப் பயன்படுத்தப்படும் விதம் தொடர்பான ஓர் அறிக்கை ஒன்று பயிற்சி முடிவுற்று ஒரு மாதத்திற்குள் சமர்ப்பித்திருக்கவில்லை.

IV. உள்ளூராட்சி நிறுவகத் தலைவர் அல்லது பிரதித் தலைவர் அல்லது உறுப்பினர் வெளிநாட்டுப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்படின் குறித்த அமைப்பு அல்லது வெளிநாட்டு அரசாங்கம் அல்லது வெளிநாட்டு நிறுவகம் இதற்காகச் செலவிடும் சகல செலவினங்கள் மற்றும் வசதிகளையும்

ஏற்க வேண்டிய போதிலும் அவ் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சுச் செயலாளரின் 2010 செப்தெம்பர் 09 ஆம் திகதிய PL/07/02/05/26 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் கருத்திற்கொள்ளப்படாது மேற்குறித்த கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

V. சுற்றுலாவிற்காக அமையக் கொடுப்பனவாக ரூபா 20,000 படியான ரூபா 80,000 கூட்டுத்தொகையான முற்பணத் தொகை வெளிநாட்டுப் பயணத்தில் கலந்து கொள்ளும் 04 உறுப்பினர்களுக்காக வழங்கப்பட்டிருந்த போதிலும் 2015 பெப்ரவரி மாதம் கணக்காய்வுப் பரிசோதனைத் திகதி வரையிலும் முற்பணத் தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 3.1.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) மீளாய்வாண்டின் போது ரூபா 835,707 பெறுமதியான 03 கணனிகள், 03 அச்சு இயந்திரங்கள், மின் உபகரணங்கள், நூலகத்திற்கான உபகரணங்கள் மற்றும் கதிரை மேசைகள் கொள்வனவு செய்யப்படுகையில் 2006 கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.8.4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி, குறித்த மாதிரிகள் அல்லது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றின் பரிந்துரை பெறப்பட்டிருக்கவில்லை. 8.12.3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி, கணனிகள் மற்றும் அச்சு இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்படுகையில் அக் கணனிகள், அச்சு இயந்திரங்கள் குறித்த மாதிரிகளிற்கு அமைய கொள்வனவு செய்யப்பட்டமைக்கு அது தொடர்பாக அறிவுடைய ஓர் உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக சபையால் தனியார் வாகனம் ஒன்றிற்காக 21 சந்தர்ப்பங்களின் போது ரூபா 337,300 தொகையான வாடகை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் வாகன வாடகை கொடுப்பனவு செய்யப்படுகையில் மேற்கொள்ளப்பட்ட கடமை, பயணித்த தூர அளவு, பயணம் தொடர்பான விபரம், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேற்குறித்த செலவினத்தில் ரூபா 210,000 தொகை செலுத்தப்படுவதற்காக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும் ரூபா 127,300 தொகையான மீதிக் கொடுப்பனவிற்காக அத்தகைய அங்கீகாரம் பெறப்பட்டமைக்கான தகவல்கள் கண்டறியப்படவில்லை.

### 3.1.3 அதிகாரப் பொறுப்பற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) ஏக்கர் வரித் தொகையான ரூபா 2,363 தொகையும், வீதவரித் தொகையான ரூபா 37,712 தொகையுமாக நிலுவை வருமானத் தொகையான ரூபா 40,075 முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது பேரேட்டுப் பதிவின் மூலம் பதிவளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது பேணப்படும் காசு மற்றும் கொள்கைக் குழுக் கூட்டங்களில் கலந்துகொண்ட பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்காக ரூபா 45,500 தொகையான படிப்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் இதற்கான முறையான அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.1.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பதிவு இல. 49-9781 ஐக் கொண்ட உழவு இயந்திரப் பழுதுபார்ப்பிற்காக ரூபா 197,692 தொகையான செலவினம் ஏற்கப்பட்டிருந்ததுடன் கொடகவெல டிப்போ பொறியியலாளரால் பரீட்சிக்கப்பட்டு பழுதுபார்த்தல்கள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இப் பழுதுபார்த்தலின் பின்னர், மேற்குறித்த உழவு இயந்திரம், ஓடப்பட்டமைக்கு நாளோட்ட அட்டவணையின் மூலம் அல்லது கோவையின் மூலம் கண்டறியப்பட்டிராததுடன் கணக்காய்வுத் தினமாகிய 2015 பெப்ரவரி 12 ஆம் திகதி வரையிலும் அவ் உழவு இயந்திரம் ஓட்ட நிலையில் இல்லாது செயலிழந்து காணப்பட்டது.

## 3.2 செயற்பாட்டு திறமையீனங்கள்

(அ) அல்லகேவத்த ஆயுர்வேத மருந்தகத்தின் மருந்துகள் களஞ்சியப்படுத்தப்படுவதற்காக போதியதும் முறையானதுமாக பேணப்பட்ட களஞ்சியம் ஒன்று இருக்கவில்லை.

(ஆ) அன்தான நீர் செயற்திட்டத்திற்காக தொழில்நுட்ப மதிப்பீடு அல்லது குறித்த மாதிரிகளிற்கு இணங்க பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டமைக்கான ஓர்

சான்றிதழ் இன்றி மீளாய்வாண்டின் போது ரூபா 400,320 பெறுமதியான நீர்க்குழாய்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. நீர் செயற்திட்டத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகள் 2015 பெப்ரவரி மாதம் கணக்காய்வுப் பரிசோதனைத் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2014 திசெம்பர் 31 வரையிலும் 251 நுகர்வோரிடமிருந்து ரூபா 169,741 தொகையான நிலுவை நீர்க் கட்டணம் அறவிடப்படுவதற்கு இருந்தது.

(இ) 2014 சனவரி முதல் 2014 திசெம்பர் வரை எல்ஈ 7471 ஆம் இலக்க கப் வண்டிக்கு உரித்தான நாளோட்ட அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 விளைவற்ற/ குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்

---

பிரதேச சபைக்குக் கிடைக்கப்பெற்றிருந்த RD 7991 ஆம் இலக்க டிபர் வண்டி மற்றும் RX 1985 ஆம் இலக்க கழிவகற்றல் வண்டி கணக்காய்வுத் தினமாகிய 2015 பெப்ரவரி 13 ஆம் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது சபையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

## 3.4 ஒப்பந்த நிர்வாகம்

---

மாகாண சபை அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் கிழக்கு நுகவெல கரவிட்ட வீதியின் எஞ்சிய பகுதி கொங்கிரீட் இடப்படும் கைத்தொழில் ரூபா 500,000 தொகையான மதிப்பீட்டில் ரூபா 493,415 தொகைக்கு ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் கைத்தொழிலுக்காக ரூபா 492,196 தொகை செலுத்தப்பட்டிருந்தது. கைத்தொழிலுக்கு உரித்தான அளவீட்டுப் பத்திரத்தின் படி, வீதியின் கொங்கிரீட் தட்டின் உயரம் 05 அங்குலமாக இருக்க வேண்டிய போதிலும் 2015 பெப்ரவரி 19 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் போது வீதியின் முடிவிலிருந்து 40 மீற்றர்கள் அளவில் மீள உள்ள தூரத்தில் சில இடங்களில் வீதியின் உயரம் 04 அங்குலங்களாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.5 திண்மக் கழிவு முகாமைத்துவம்

பிரதேச சபை அதிகார எல்லைக்கு உட்பட்ட பகுதியில் சேகரிக்கப்படும் குப்பைகளை முகாமைத்துவம் செய்வது தொடர்பில் முறையான நடவடிக்கை இல்லாததுடன் நகரில் நாளாந்தம் சேகரிக்கப்படும் குப்பைகள் கவுபெவத்தை பிரதேசத்தின் திறந்த வெளியில் அல்லது குழிகள் வெட்டப்பட்டு மண்குழிகளுக்குள் புதைத்தல் போன்ற பாதுகாப்பற்ற முறைகளின் மூலம் குப்பைகளை அகற்றும் காரணமாக பிரதேச மக்களின் பாரிய எதிர்ப்பு ஏற்பட்டிருந்தது. அவ்வாறு குப்பைகளை அகற்றுவதற்காக குழிகளை வெட்டுவதற்காக ஆண்டின் போது ரூபா 140,990 தொகையான செலவினம் ஏற்கப்பட்டிருந்தது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிர்வாகம்
(ஊ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்